குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி..எண் 11/2022

ம.சா.2

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 19–ம் தேதி புதன் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விநாயகசுந்தரகிருஷ்ணன் | தொழில் | |
| தந்தை பெயர் | பெருமாள் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 12.33 மணி,

Complainant Suryasekar present. Advocate Mr.A.Vasanthan present for Advocate Mr.Karunakaran for Complainant. Accused Tamilkani present.

**முதல் விசாரணை :**

1) நான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காருவள்ளி கிளையின் மேலாளராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் வங்கியில் பணிபுரிவதற்கு என்னுடைய அடையாள அட்டையை எடுத்து வந்துள்ளேன், அடையாள அட்டை எண் 56408 ஆகும். புகார்தாரர் எங்களது வங்கியில் வங்கி கணக்கை பராமரித்து வருகிறார். புகார்தாரர் இவ்வழக்கு காசோலை 000118 ஐ ரூ.5,00,000/– க்கு 21.01.2022 ம் தேதி வசூலுக்கு செலுத்தினார். மேற்படி காசோலை போதுமான பணம் இல்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது, அதற்கான ஆவணங்களை தற்போது இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **புகார்தாரரின் வங்கி கணக்கின் 20.01.2022 முதல் 25.01.2022 வரையிலான பட்டியல் ம.சா.ஆ– 10 ஆகவும், காசோலை திருப்பப்பட்ட பதிவேடு ம.சா.ஆ–11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேறு ஒரு ஒத்திவைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.20 மணி.

Sd/.S.Sadhamhusain,
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.